செ.வெ.எண் :05 /நவம்பர் நாள்: 04.11.2019

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாண்புமிகு பாரத பிரதமரின் "அனைவருக்கும் வீடு" திட்டத்தின் கீழ் தகுதியான பயனாளிகளை தேர்வு செய்வதற்கு சிறப்பு முகாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் PMAY(U)HFA "அனைவருக்கும் வீடு" திட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 7 பேரூராட்சிப் பகுதிகளில் தகுதியான பயனாளிகளை தேர்வு செய்வதற்கு சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் PMAY(U)HFA "அனைவருக்கும் வீடு" திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட பத்திரம் அல்லது பட்டா வைத்திருந்து வீடுகட்ட விரும்புபவர்கள் மற்றும் சொந்தமாக ஓடு/குடிசை வீடுகளில் வசித்து வருபவர்கள் அதை மாற்றி கான்கிரீட் வீடாக கட்ட விரும்புபவர்களும் பயன்பெறலாம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதற்கட்டமாக 7 பேரூராட்சிப் பகுதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. பயனாளிகள் இம்முகாமில் கலந்து கொள்ளும்போது தங்களது இடத்திற்கான பதிவு செய்யப்பட்ட பத்திரம் அல்லது பட்டா/வங்கிக்கணக்கு புத்தகம்/ஆதார் அட்டை (கணவன்/மனைவி இருவருக்கும்) மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றை எடுத்து வருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இச்சிறப்பு முகாமானது 14.11.2019 அன்று ஆர்.எஸ்.மங்கலம், தொண்டி, மண்டபம் ஆகிய பேரூராட்சிகளிலும், 15.11.2019 அன்று கமுதி, முதுகுளத்தூர், அபிராமம் ஆகிய பேரூராட்சிகளிலும், 16.11.2019 அன்று சாயல்குடி பேரூராட்சியிலும் என முறையே நடத்தப்படவுள்ளன. இது தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு கைபேசி எண்கள்-9443183194, 9487390981, 9488883638 & 6380654851 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**